**செய்திவெளியீடுஎண்: 676** **நாள்:17.09.2020**

**<u>செய்திவெளியீடு</u>**

''**அறுவடைக்கு பிந்தைய மற்றும் விநியோக தொடர் மேலாண்மை**'' குறித்த காணொளிவாயிலான கருத்தாய்வுக் கூட்டம், மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவின் **மாண்புமிகு துணைத் தலைவர் திரு.சி.பொன்னையன் அவர்களின்** தலைமையில் 17.09.2020 அன்று காலை 10.30 மணிக்கு மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழு, எழிலகம், சென்னை– 5ல் நடைப்பெற்றது. இக்கூட்டத்தில் மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவின் உறுப்பினர்–செயலர் திரு.அனில் மேஷ்ராம், இஆப., குழுமத் தலைவர் (வேளாண்மை, கொள்கை மற்றும் திட்டம்) திரு.சீ. சுபாஷ் சந்திரபோஸ், துறைசார்ந்த உயர் அலுவலர்கள் மற்றும் துறைசார் வல்லுனர்கள் கலந்து கொண்டனர்.

இக்கருத்தரங்கில், வேளாண்மைத்துறை, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வள பல்கலைக்கழகம், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ஆகியவற்றின் துறைசார்ந்த வல்லுநர்கள் பங்கேற்று பேசினர்.

வேளாண்பண்ணைகள், கால்நடைகள் மற்றும் கடற்சார் உற்பத்திகளில், அறுவடைக்கு பிந்தைய இழப்புகளை குறைப்பது மற்றும் விநியோக தொடர் மேலாண்மை குறித்த மிகச் சிறந்த வழிகளைக் கண்டறிவதே இந்த கருத்தரங்கின் நோக்கம். அறுவடைக்கு பின் செய்நேர்த்தி தொழிற்நுட்ப கண்டுபிடிப்புகள் மற்றும் திட்டங்கள் குறித்து கருத்தரங்கில் விவாதிக்கப்பட்டது. இக்கருத்தரங்கின் பரிந்துரைகள் அறுவடைக்கு பிந்தைய இழப்புகளை கணிசமாக குறைத்து, விவசாயிகளுக்கும், வேளாண் வணிக நிறுவனங்களுக்கும் தங்களது முதலீடுகளில் சிறந்த வருவாயைப் பெறவும், நுகர்வோர் பயன்பெறவும் உதவும்.

உறுப்பினர் செயலர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**